[21st January 1964

கனம் திரு. பூ. கக்கன் : போலீசார் தங்கள் கடமையைச் சரிவரச் செய்கிறார்களா என்று கண்காணிப்பதற்காகத்தான் அவரவர்கள் பிடித்த கேஸ் பற்றி விவரம் கோரப்படுகிறதே தவிர, 'கேஸ் போடுங்கள்' என்பதற்காக அல்ல.

திரு. டி. கார்ச்சா கவுடர் : பர்மிட் பெறுபவர்கள் கள்ளச் சாராயத்தைக் குடித்துவிட்டு, பர்மிட்டில் வாங்கும் பிராந்தியையும் பீரையும் ப்ளாக் மார்க்கெட்டில் விற்றுக்கொண்டு வருகிறார்கள் என்பது உண்மையா? வியாதி என்று போகும் நோயாளிக்கு மருந்துதானே ப்ரிஸ்க்ரைப் பண்ண உரிமை உடையவர் டாக்டர்? ப்ராந்தி கொடுத்தால் எப்படி வியாதி தீரும்? இதை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து, பர்மிட் கொடுக்கும் பழக்கத்தை அரசாங்கம் ஒழிக்க முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : நோயாளிக்கு என்ன வியாதி என்பதை டாக்டர்தான் பார்த்து நிவாரணம் சொல்ல வேண்டும். நாம் சொல்ல முடியாது. கனம் அங்கத்தினரும் சொல்லிவிட முடியாது. டாக்டர்கள் நோயாளிகளைப் பார்த்து, ப்ரிஸ்க்ரைப் செய்யும்போது, அரசாங்கம் மேலும் பரிசிலனை செய்த பிற்பாடு முடிவு செய்யும்.

திரு. சா. கணேசன் : அப்படிப் பர்மிட் கொடுக்கும்போது, அந்நிய நாட்டுச் சரக்குக்கு இல்லாமல் சுதேசிக் கள்ளுக்கென்றே வரையறுத்துக் கொடுப்பதென்று ஒரு ரெஸ்ட்ரிக்ஷன் செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இந்த யோசனை அரசாங்கத்திற்கு இல்லை என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

கூட்டுறவு நூற்பு ஆலைத் தொழிலாலை, பேட்டை

*** 53 கேள்வி—திரு. வி. எஸ். எஸ். மணி (திரு. எம். எஸ். மணி சார்பாக) :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம். பேட்டை தென்னிந்திய கூட்டுறவு நூற்பு ஆலைத் தொழிலாளர்களுக்காக ஒரு கூட்டுறவு பண்டகசாலை அமைக்க பதிவு செய்யப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், பதிவாகி ஆறு மாதத்திற்கு மேலாகியும் பண்டகசாலை அமைக்காமலிருப்பதன் காரணமென்ன?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) Yes, Sir.

(*b*) A Co-operative Stores for the workers of the Co-operative Spinning Mills at Pettai in Tirunelveli district was registered on 27th July 1962. A suggestion was made that the first set of Board of Directors might be nominated. As the general pattern is to have an elected Board with an ex-officio president representing the

21st January 1964]

management, the General Manager of the mills was advised to start the stores with an elected Board. The sponsors had taken time to get this done, and the stores started functioning on 12th May 1963.

கனம் சபாநாயகர் : கேள்வி 54 தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

Land Mortgage Banks (Registration of Documents)

* 55 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that the borrowers of the Co-operative Land Mortgage Banks are given facilities for registering documents up to the value of Rs. 2,000 in the Sub-Registrar's Office free of cost; and

(*b*) if so, whether there is any proposal before the Government to extend the same facilities to the borrowers from the credit societies also?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : பெரும்பாலும் ஏழைகள் கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்குவதால், அவர்களுக்கு அனுகூலமாக இருக்கும் பொருட்டு இரண்டாயிரம் ரூபாய் வரையில் பதிவுக் கட்டணம் இல்லாமல் ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. மு. பொ. வடிவேல் : நில அடமான பாங்குகளில் கடன் வேண்டுமென்பதற்காகத்தான் பங்குத் தொகை கட்டுகிறார்கள். கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்ட பிறகுகூட ஐந்து ஆண்டுகள் ஆன பிறகுதான் பங்குத்தொகை திருப்பிக் கொடுக்கப்படும் என்ற விதி இருக்கிறது. கடைசித் தவணை கட்டும்போது அதை 'அட்ஜஸ்ட்' செய்துகொள்வதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : என்னிடத்தில் அதற்கு வேண்டிய தகவல் இல்லை.

எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை முடிவுகள்.

* 56 கேள்வி.—**திரு. செ. மாதவன் (திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி சார்பாக) :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதி ரிசல்ட் வெளியிட ஆகும் காலதாமதத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், எந்த முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப் படும் ?